1977 ஜூலை 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

நான் மேற்கொண்டு சுதந்திரமாக, பயமின்றி, தயக்கமின்றி பணியாற்றுவதற்குத் தடங்கல் ஏற்படுத்தும் வகையிலே, 'மெயில்' பத்திரிக்கை வேண்டுமென்றே உள்நோக்கம் கொண்டு இதை எழுதியிருப்பதாக நான் கருதுகிறேன். இது, நிச்சயமாக, அவையின் உரிமையை, குறிப்பாக, உறுப்பினர் என்ற முறையில், நான் பணியாற்ற வேண்டிய உரிமையை மீறியதாக அமைந்திருக்கிறது என்ற காரணத்தினுல் இதை உரிமைப் பிரச்னையாக இங்கே கொண்டு வந்திருக்கிறேன்.

பத்திரிக்கைகள், "ஃபேர் காமென்ட்" என்று சொல்வார்களே, அந்த அடிப்படையில் இங்கே 'காமென்ட்' செய்ய உரிமை படைத்தவர்கள். அதை என்றும் நான் ஒப்புக்கொள்கிறேன். பத்திரிக்கைகளுக்கு அதற்கு சுதந்திரம் இருக்கிறது. அதற்கு பதிலாக, உள்நோக்கம் கொண்டு எழுதுவது என்று சொன்னுல், கற்பனை செய்து கொண்டு எழுதுவது என்று சொன்னுல் அதன் வாயிலாக உறுப்பினருடைய உரிமையை மீறியதாக ஆகும். அவர்களுடைய சுதந்திரத்தை பாதிக்கக்கூடிய முறையில் எழுதுவது, பொதுமக்களிடையேயும் உறுப்பினருடைய தொகுதியிலே இருக்கின்ற மக்களிடையேயும் தவறுன கருத்து ஏற்படும் வகையில் எழுதுவது malicious and motivated. என்ற பார்டருக்கு உட்பட்டு வரும் வகையில் தன்னுடைய கற்பனையான கருத்தை எழுதுவது, பத்திரிக்கைச் சுதந்திரத்திற்கும், பத்திரிக்கா-தர்மத்திற்கும் உட்பட்டு வராது என்ற காரணத்தினுல் இதை உரிமைப் பிரச்சினையாக்கி அவை முன் கொண்டு வந்திருக்கிறேன். எனவே, இதை உரிமைக் குழுவிற்கு, பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பி நியாயம் வழங்க வேண்டுமென்று தங்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய தீர்ப்பைப் பிறகு வழங்குகிறேன்.

(ஆ) 'முரசொலி' நாளேடு மீது எழுப்பப்பட்ட பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் முரசொலிப் பத்திரிக்கையின் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்துள்ளார். இந்த அவையில் 9—7—1977 அன்று மாண்புமிகு முதல்வரவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியை விட்டுவிட்டுப்

பிரசுரித்துள்ளது என்றும், இது வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒன்று என்றும், மேலும், தி.மு.க. உறுப்பினர்களின் பேச்சுக்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன என்றும், மற்றவர்களின் பேச்சு வெளியிடப்படவில்லை என்றும், இம்மாதிரி, பேரவையின் நடவடிக்கைகளை முழுமையாக வெளியிடாமல், ஒரு சார்பாக வெளியிடுவது அவை உரிமையை மீறும் செயலாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இது குறித்து, இது எப்படி அவை உரிமை மீறல் பிரச்சினை ஆகும் என்பதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையில் அவையில் நடைபெறுகின்ற நடவடிக்கைகளை மாற்றமில்லாமல் தெளிவாக, முறையாக வெளியிடுவது என்பது பத்திரிகைகள் பின்பற்றிவர வேண்டிய ஒன்று என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொண்டு, பேரவையின் 184-ஆவது விதியின் கீழ், அவை மீறல் குறித்து, கீழ்க்கண்ட பிரச்னையை இந்தப் பேரவையில் எழுப்ப தங்கள் அனுமதியை வேண்டியிருக்கிறேன்.

வெளியூர் 11—7—1977 'முரசொலி' பத்திரிகையில் முதல் பக்கத்தில் சட்டமன்ற நடவடிக்கைகள்--தேர்தலில் ஆதித்தனாரை அண்ணா தி. மு. க. ஆதரிக்கவில்லை என்ற காரணத்தால், கலைஞர் எழுப்பிய கேள்விக்கு எம். ஜியார் தந்த பதில் என்று தலைப்பிட்டு, 9—7—1977 அன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சி பற்றி வெளியிடப்பட்டுள்ளது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சின் ஒரு பகுதி விடப்பட்டிருக்கின்றது. பிரசுரிக்கப்பட்டிருப்பது, கீழ்க்கண்டவாறு இருக்கிறது :

"முதல்வர் எம்.ஜி.-யார் : நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்ட மன்றத் தேர்தலிலும் எங்களுக்கு எதிராகப் போட்டியிட்டவர்களே என் படத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். எல்லோருக்கும் மறுப்பு தெரிவித்தால் என்னுடைய நேரம் என்ன ஆவது? என்னுடைய படத்தைப் போட்டு விளம்பரப்படுத்தக் கூடாது என்று அந்த நபருக்கு எழுதிய கடிதத்தின் பிரதி என்னிடம்

இருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு, நாட்டுக்கு எது தேவையோ, அதுபற்றி இந்த அவையில் விவாதிப்பது நல்லது"

என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திண்டுக்கல் தேர்தலில். . . அவருடைய படத்தைப் போட்டு இருப்பதைப் பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பத்திரிக்கையைப் பற்றி என்ன உரிமை மீறல் என்பதைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: அந்தப் பத்திரிக்கையில் அன்று முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட கருத்தில், எந்தப் பகுதி அடிப்படையாக இருக்கிறதோ, அந்தப் பகுதியை மட்டும் மறைத்து விட்டு, அவர்களுக்கு எது சாதகமாக இருக்கிறதோ அந்தப் பகுதியை மட்டும் போட்டதின் மூலமாக இந்த அவையின் உரிமை பாதிக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். திண்டுக்கல் தேர்தலில் அவருடைய படத்தைப் போட்டு, உதயசூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட் டிருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவர் களுக்குச் சாதகமாக அந்தச் செய்தியைப் போடவேண்டுமென் பதற்காக, அவர்கள், திண்டுக்கல்லில், எதிராகப் போடப்பட்ட அந்த விளம்பரத்தைப் போடாமல் ஆதித்தனாரை ஆதரித்ததாக, ஒரு விளம்பரப் போஸ்டர் இன்று பத்திரிக்கையில் வெளியிடப் பட்டிருக்கிறது. அப்படி வெளியிடுகிற நேரத்தில், வெளியில் பொது மக்கள் அந்தக் கருத்தை மட்டும் பார்த்தால், ஏதோ ஆதித்தனார் தான் அதைச் செய்திருக்கிறார் என்று தெரியுமே தவிர, மற்றவர்கள் அப்படிச் செய்யவில்லை என்று அர்த்தமாகிற நிலைமை உண்டாகிறது. அதற்கு அடிப்படையைச் சொல்கிறேன். ஆதித்தனார் அதைச் செய்திருக்கிறாரா, அல்லது ஆதித்தனாருக்கு வழிகாட்டியாக இருப்பவர், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற பழைய முதலமைச்சரா என்பதைத்தான் நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையை நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் எனது தீர்ப்பைப் பிறகு வழங்குகிறேன்.

(இ) 'மாலை முரசு' நாளேடு மீது எழுப்பப்பட்ட பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் 'மாலை முரசு' பத்திரிக்கையின் மீது ஒரு அவை உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்துள்ளார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் பேச்சுகள் மட்டும் அந்தப் பத்திரிக்கையில் போடப்படுவதாகவும் மற்றவர்களின் பேச்சுகள் வெளியிடப்படுவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். எப்படி இது அவை உரிமை மீறல் பிரச்னையாகும் என்பது குறித்து சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னைகள் வந்ததிலிருந்து உண்மையில் இது சம்பந்தமாக நல்லதொரு முடிவை தாங்கள் கொடுத்தால் இந்த ஹௌஸில் உள்ள உறுப்பினர்களின் உரிமையை மட்டுமல்லாமல், இந்த ஹௌஸ் ப்ரொஸீடிங்க்ஸ்-ஐ பாதுகாக்கக் கூடியளவிற்கு அது உதவியாக இருக்கும். இங்கு சம்பந்தப்பட்ட 'மாலை முரசு' உட்பட எல்லாப் பத்திரிகைகளின் 'அக்ரெடிட்டட் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ்'-ம் உங்கள் அனுமதியோடு இங்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த ஹௌஸின் ப்ரொஸீடிங்க்ஸை ரிப்போர்ட் பண்ணுவதற்காக அவர்களுக்கு பெர்மிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பத்திரிகைகளில் கொடுக்கக்கூடிய சித்திரமானது, நான் 'கார்டட்டாக' சொல்கிறேன், It must be fairly realistic picture of the proceedings of the House. ப்ரஸ்க்கு ப்ரீடம் இருக்க வேண்டியதுதான், அவர்களுக்கு உரிமை இல்லை என்று நான் சொல்லவில்லை. இங்கு 'அக்ரெடிட்டெட் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ்' வந்து உட்கார்ந்து ரிப்போர்ட் செய்யும்